**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 01.08.2026
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆராய்ச்சியிலிருந்து தொழில்முனைவு வரை – உயிரித் தொழில்நுட்பத் தொழில்முனைவில் மாணவர்களை ஊக்குவிக்கும் COXBIT

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையம் (COXBIT) மற்றும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் (CPMB&B) இணைந்து, "கல்வி ஆராய்ச்சியிலிருந்து ஸ்டார்ட்அப் வரை" என்ற தலைப்பில் சொற்பொழிவை 2026 ஆகஸ்ட் 1 ஆம் தேதி கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் SPGS ஆன்லைன் அகாடமி அரங்கில், மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் புதுமை சார்ந்த தொழில்முனைவை ஊக்குவித்தல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் சூழலை வலுப்படுத்துதல் என்ற நோக்கத்தின் ஒரு பகுதியாக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பி.டெக். (உயிரித் தொழில்நுட்பம்) பயிலும் 120 இளநிலை மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக நீர்பாசி கார்பன் சொல்யூஷன்ஸ், கோயம்புத்தூர் நிறுவனத்தின் நிறுவனர் முனைவர் ஜிதேஷ் விஜயன், Ph.D. கலந்து கொண்டு, கல்வி ஆராய்ச்சியிலிருந்து தொழில்நுட்ப

அடிப்படையிலான வெற்றிகரமான நிறுவனத்தை உருவாக்கிய தனது தொழில்முனைவு பயணத்தை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

தனது உரையில், ஆராய்ச்சி முடிவுகளை வணிகமயமாக்கும் செயல்முறையின் முக்கிய கட்டங்களான முன்மாதிரி (Prototype) உருவாக்கம், தொழில்நுட்ப சரிபார்ப்பு (Technology Validation), தொழில்துறை ஒத்துழைப்பு, வணிக மாதிரி உருவாக்கம், சந்தை மதிப்பீடு (Market Validation), முதலீட்டு தயார்நிலை (Investment Readiness) மற்றும் நிறுவன விரிவாக்கம் (Enterprise Scaling) ஆகியவற்றை விரிவாக விளக்கினார்.

மேலும், வாய்ப்புகளை அடையாளம் காணுதல், வணிக மாதிரி புதுமை, தொழில்நுட்ப தயார்நிலை மதிப்பீடு (Technology Readiness Assessment), இடர் மேலாண்மை (Risk Management), மற்றும் மூலோபாய திட்டமிடல் (Strategic Planning) போன்ற வெற்றிகரமான தொழில்முனைவோருக்குத் தேவையான முக்கிய திறன்களை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற பி.டெக். உயிரித் தொழில்நுட்ப மாணவர்கள் தொழில்முனைவு, ஸ்டார்ட்அப் உருவாக்கம், நிதி உதவிகள், தொழில்நுட்ப வணிகமயமாக்கல் மற்றும் உயிரித் தொழில்நுட்பத் துறையில் தொழில் வாய்ப்புகள் குறித்து ஆர்வமுடன் கேள்விகள் எழுப்பி கலந்துரையாடினர். முனைவர் ஜிதேஷ் விஜயன், அமெரிக்காவில் நேரடி முனைவர் பட்ட (**Direct Ph.D.**) படிப்புகளைத் தொடர்வது, ஆராய்ச்சி சார்ந்த தொழில் வாழ்க்கையை உருவாக்குவது மற்றும் உயர்கல்வியுடன் தொழில்முனைவையும் இணைத்து முன்னேறுவது குறித்து மாணவர்களுக்கு வழிகாட்டினார். மேலும், உயிரித் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான ஆராய்ச்சி வாய்ப்புகள், ஸ்டார்ட்அப் இன்கியுபேஷன் வசதிகள் மற்றும் பல்வேறு நிதி ஆதரவு திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்தார். அத்துடன், அரசு மானியங்கள், விதை நிதி (**Seed Funding**), ஏஞ்சல் முதலீடு (**Angel Investment**), துணிகர முதலீட்டு நிதி (**Venture Capital**), இன்கியுபேட்டர் மற்றும் ஆக்சிலரேட்டர்

(**Incubator & Accelerator**) திட்டங்கள், அறிவுசார் சொத்துரிமை (**Intellectual Property**) பாதுகாப்பு மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கக்கூடிய வணிக முன்மொழிவுகள் தயாரிப்பதன் அவசியம் ஆகியவையும் இச்சொற்பொழிவில் எடுத்துரைக்கப்பட்டன.

முன்னதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர உயிரித் தொழில்நுட்பத் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர். வே. ராஜன்பாபு வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையத்தின் (COXBIT) இயக்குநர் முனைவர் ந. செந்தில் சிறப்புரையாற்றினார். இறுதியாக, தாவர உயிரித் தொழில்நுட்பத் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் கு. ஹேமபிரபா நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் மற்றும் COXBIT குழுவினர் ஒருங்கிணைத்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**